# நெறி 11: ஊக்கமுடைமை

## மதிப்பீடு

அ. ஊக்கமுடைமையை வலியுறுத்தும் சரியான கூற்றுக்கு (✓) என்றும் ஊக்கமின்மையைக் குறிக்கும் கூற்றுக்கு (x) என்றும் குறியிடுக.

1. நகுலனின் பெற்றோர் அவனுக்குத் தேவையான வசதிகள் செய்து கொடுத்தும் அவன் ஆண்டு இறுதித் தேர்வில் தோல்வியே அடைந்தான். ☐
2. சிறு வயதிலேயே கண் பார்வையை இழந்த மதிவாணன் பெற்றோரின் தூண்டுகோலால் இன்று இளங்கலை மற்றும் முதுகலைப் பட்டத்தையும் பெற்றுள்ளார். ☐
3. திலகனின் காற்பந்து விளையாடும் திறமையைக் கண்டு அவன் மாமா அவனுக்குப் புதிய காற்பந்தும் காலணியும் வாங்கிக் கொடுத்தார். ☐
4. கைச்செலவுக்காக தனக்குக் கொடுக்கப்படும் பணத்தைச் செலவழித்து விட்டு, தன் தங்கை சிறுகச் சிறுக சேமித்து வைத்த பணத்தைக் கேட்டான் இராஜு. ☐
5. தந்தையை இழந்த பூங்கோதை, தாய்க்குத் தினமும் உதவி செய்வதோடு படிப்பிலும் சிறந்த மாணவியாகத் திகழ்ந்தாள். ☐

LIVEWORKSHEETS